# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, VANDAVASI.

| | | |
|---|---|---|
| Calendar | : | Case No. C.C.251/2017 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Deposition of Witness for | : | |
| Prosecution | : | |
| Defence | : | அ.சா.1 |
| Name | : | கிருஷ்ணன் |
| Father's Name | : | ராஜமாணிக்கம் |
| Village | : | வயலூர் கிராமம் |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the 04.07.2025.

**1 மற்றும் 4, 5 எதிரிகள் ஆஜர். 6ம் எதிரி ஆஜரில் இல்லை. குவிமுச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டுள்ளது. 2 மற்றும் 3 எதிரிகள் இறந்துவிட்டார்கள்.**

<u>முதல் விசாரணை</u>

நான் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் செய்யாறு வட்டார கல்வி அலுவலகத்தில் உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜா் எதிரிகளை தெரியும். நீதிமன்றத்தில் ஆஜராகாத 6ம் எதிரியை தெரியும். எதிரிகள் எங்கள் கிராமத்ததை

சேர்ந்தவர்கள். கடந்த 21.03.2014ம் தேதி என்பதை சாட்சி கையில் எழுதி வைத்துக்கொண்டு பார்த்து சாட்சியம் அளித்தார். 20.03.2014ம் தேதி மாலை 1ம் எதிரி என்னுடைய அம்மாவை அடித்துவிட்டார். அப்போது நான் செய்யாரில் இருந்தேன். மறுநாள் காலையில் தகவல் தெரிந்து நானும் எனது தம்பியும் 1ம் எதிரியை நியாயம் கேட்டு கையால் அடித்தோம். அதனால் 1ம் எதிரி உங்களை என்ன செய்கிறேன் பார் என்று சொல்லிவிட்டு அவரது அண்ணன் பட்டுசாமி, எத்திராஜ், தீர்த்தமலை, ஆதி, மீனாட்சி ஆகியோர்களை அழைத்துக்கொண்டு என்னுடைய வீட்டிற்கு அருகில் வந்து 1ம் எதிரி என்னை வலது கண்ணில் கல்லால் குத்திவிட்டார். 2ம் எதிரி கல்லால் என் நெற்றியில் அடித்துவிட்டார். அதனால் நான் சுய நினைவு இன்றி கிழே விழுந்துவிட்டேன். என்னை யாரோ ஒருவர் வந்தவாசி அரசு மருத்துமனைக்கு சிகிச்சையில் சேர்த்தார்கள். தேசூர் போலிசார் என்னிடம் வாக்குமூலம் பெற்றார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடைதுதான் .அந்த புகார் வாக்குமூலம் அ.த.சா.ஆ.1 ஆகும். பின்னர் மேல் சிகிச்சைக்காக செங்கல்பட்டு அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் ஒருவாரம் சிகிச்சை எடுத்துக்கொண்டேன். இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை.**

இல்லை.